பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆனி 18 (1—7—72): சனி

வெளியூர்: ஆனி 19 (2—7—72) ஞாயிறு [இதழ்: 15

அமெரிக்காவில் மரணதண்டனை ஒழிப்பு

தலைமை நீதிமன்றம் தீர்ப்பு

வாஷிங்டன், ஜூன் 30—

"மரண தண்டனை, அரசியல் சட்டத்திற்கு முரணானது-- கொடுமையானது -- அசாதாரணமான தண்டனையாகும்"

என்று அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

ஐந்து நீதிபதிகள் இவ்வாறு

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக அரசின் தனிப்பெரும் சிறப்பு

பிற மாநிலத்தவரும் பின்பற்றத்தக்க மக்கள் நலத் திட்டங்கள்

முதல்வர் கலைஞரின் சீரிய இலட்சியம் வெற்றி பெற நல்வாய்ப்பு

ஆளுநர் கே. கே. ஷாவின் மனந்திறந்த பாராட்டு -- மாவட்ட ஆட்சித் தலைவர்களிடை நல்லுரை

சென்னை, ஜூலை 1—

"வளர்ந்துவரும் பொருளாதாரத்தில்--சனநாயக சோஷலிச இலட்சியத்தைக் கொண்ட ஒரு நாட்டில்--சனநாயகத்தால் உண்டாகும் பலவீனங்களைப் பழிபாவங்களுக்கு அஞ்சாத கொடியவர்கள் தவருன வழிகளில் பயன்படுத்திக்கொள்வதைத் தடுக்க வேண்டுமானுல், கட்டுப்பாட்டுடன் கூடிய செயல்முறையே தக்க பாதுகாப்பாக அமைய முடியும்.

"நல்வாய்ப்பின் பயனாகத் தமிழ்நாடு பல்வகைப்பட்ட இயற்கை வளங்களை நிரம்பப் பெற்றிருக்கிறது--சிறந்த பண்பாட்டுச் சிறப்பை வழிவழி வந்த மரபாகப் பெற்றுள்ளது.

"பல சமுதாயப் பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திய முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குறது; வளமைமிகு மாநிலத்தை அமைக்கத் தேவையான ஒரு நிலையான அரசும்--சிறந்த ஆட்சி நிர்வாகமும் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன எனபதும் பெருமிதத்தோடு நாம் எண்ணிடத்தக்கவைகளாகும்.

"நிலையான அரசும்--சிறந்த ஆட்சி நிர்வாகமும் அமைந்திராவிடில், எவ்வளவுதான் நல்ல திட்டங்களாக இருப்பினும், அவை வெற்றி பெற்றிருக்கமாட்டா; இங்கு நிலவுகின்ற நிலையான அரசியல் தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியுற்ற அரசியல் உணர்வுக்கு ஓர் அறிகுறியாகும்.

"சட்டம்--ஒழுங்கு--பொது அமைதி இவற்றைக் காத்திடுவதில்தான் உண்மையான முன்னேற்றம் அடங்கியிருக்கிறது; பல சமயத்தார்களுக்கு இடையே நிலவுகின்ற நல்லுறவு, இங்கே உள்ள சமூக--அரசியல் உறவுகளுக்கு எடுத்துக்காட்டாகும்; இது பிறர் பார்த்துப் பின்பற்றத்தக்கதாகும்.

"மாவட்ட ஆட்சி நிர்வாகத்துக்குப் பொறுப்பாக உள்ள கலெக்டர்கள், தங்களது கடுமையான வேலைகளைப் பரிவோடும்--தொண்டுள்ளத்தோடும் செய்துவருவார்களானுல்--சட்டம் ஒழுங்கையும், பொது அமைதியையும் காக்கும் பொறுப்பில் உள்ள காவல் துறை அதிகாரிகள தங்களது உயர்ந்த பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து வருவார்களானுல்--முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு கொண்டிருக்கின்ற சமுதாயப் புரட்சி இலட்சியமென்பது ஒரு கனவாக அல்லாமல் நடைமுறையில் நிறைவேற்றத்தக்கதாகும்"

என்று சென்னையில் நேற்று துவங்கி நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்கள் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் குறிப்பிட்டார்; தொடர்ந்து பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது :—

"சனநாயகத்தில் அதிகார பீடங்களுக்கு அப்பால் தொலை தூரத்தே இருக்கக்கூடிய மக்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக எண்ணி, அவர்களுக்குச் சலிப்புத் தன்மை ஏற்படலாம்; இந்தச் சலிப்பு எந்த அளவுக்குத் தவிர்க்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு ஆட்சி நிர்வாகம் வெற்றியடையும்.

மக்கள் நலன்களைப் பாதுகாக்கும் அறங்காவலர்களாக அதிகாரிகள் கருதப்படுகிருர்கள்; தமிழகத்து அதிகாரிகள இந்தப் பொறுப்பை அறிந்து நடந்துகொளகிருர்கள் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சாமானிய மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய காரியங்களை அகற்றுவதில் மிகுந்த அக்கறையோடு அதிகக் கவனம் செலுத்திவரும் தமிழக முதல்வரையும் -- அவரது அமைச்சரவைத் தோழர்களையும் நான் கட்டாயம் பாராட்டவேண்டும்.

நாட்டு வளத்துக்கான திட்டங்கள் தீட்டுகின்ற பணியில் தற்போதைய போக்கு, மரவல் முறையில ஆங்காங்கு திட்டங்களை வகுத்திடுவதாக இருக்கிறது; திட்டமிடுவதானது மேலே இருந்தும் -- அடி மட்டத்திலிருந்தும் ஒரே நேரத்தில நடைபெறுலன்றி, மக்களிடையே தாங்கள புறக்கணிக்கப்படுகிரேும் என்ற விரகதி தோனறுவதைத் தவிர்க்க முடியாது.

தமிழ்நாட்டில் நிறைவேற்றப் பட்டுவருகின்ற மனு நீதித் திட்டம் -- கிராமப்புற பணித் திட்டம் -- கண்ணொளி வழங்கும் திட்டம் -- இளைஞர் அணித் திட்டம் -- குடும்ப நலத் திட்டம் ஆகியவை அடித்தளத்திலிருந்தே தீட்டப்படுகிற திட்டங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்; இத்தகைய திட்டங்கள் மக்கள் மனதைக் கவரும் என்பது உறுதி.

தமிழ்நாட்டில் கட்டுப்படியாகாத துண்டு நிலங்களை வைத்திருப்போர் பற்றியும் -- வேலை தேடுவோர் பற்றியும் -- கல்வியிற் சிறந்து ஒளிமயமாக விளங்கி மேற்படிப்புக்குச் செல்ல வசதியற்றிருக்கும் இளைஞர்கள், மகளிர் பற்றியும் மாவட்ட அளவில் (திட்டமிடுதலுக்குத் துணையாக) சரியான புள்ளிவிவரங்கள் மேற கொள்ளப்பட்டுள்ளது அறிந்து நான மகிழ்ச்சியடைகிறேன்; இந்த விவகாரங்களில் உரிய கவனம் செலுத்திவருகின்ற முதல்வர் அவர்களையும் -- அவரது தோழர்களையும் பாராட்டுகிறேன.

1967 முதல் 1972 வரையில் இயமாநிலத்தில் 5,29,000 ஏக்கர் நிலம், நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு இதுவரை பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது மன நிறைவை அளிப்பதாக இருக்கிறது; இதே காலத்தில், சொந்த வீட்டு மனையற்ற ஏழையருக்கு 3,42,421 வீட்டு மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எந்த அளவுக்கு உள்ளபூர்வமாக இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஜூலை 2---

கொள்கை விளக்கக் கூட்டங்கள்

அமைச்சர்கள் -- முன்னணித் தோழர்கள் கலந்துகொள்ளும் ஊர்கள்

கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் அறிக்கைக் கிணங்க, ஜூலை 2 ம் நாள் தமிழகமெங்கும் நடைபெறவிருக்கும் கொள்கை விளக்கக் கூட்டங்களில் அமைச்சர்கள் மற்றும் கழக முன்னணித் தோழர்களும், தோழமைக் கட்சியினரும் கலந்துகொள்ளவிருக்கும் ஊர்கள் விவரம் வருமாறு :—

சென்னை	...	முதலமைச்சர் கலைஞர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி. டி. எம். சண்முகம் டி. வி. நாராயணசாமி
கடலூர்	...	அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
திருச்சி	...	அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அப்துல் வகாப் ஜானி எம்.எல்.சி.
ஆற்காடு	...	அமைச்சர் என். வி. நடராசன்
விழுப்புரம்	...	அமைச்சர் சத்தியவாணிமுத்து துணை மேயர் என். வி. என். சோமு
வேலூர்	...	அமைச்சர் ஔ. உ. சண்முகம்
செங்கற்பட்டு	...	அமைச்சர் செ. மாதவன் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா காட்டூர் கோபால்
ஆம்பூர்	...	அமைச்சர் க. இராசாராம்
தஞ்சை	...	அமைச்சர் மன்னை நாராயணசாமி
அம்மாப்பேட்டை	...	கீ. வீரமணி
அச்சிறுபாக்கம்	...	அமைச்சர் சி. பா. ஆதித்தனர் டி. கே. பொன்னுவேலு
கோவில்பட்டி	...	அமைச்சர் ஓ. பி. இராமன் கடையநல்லூர் திராவிடமணி
திருநெல்வேலி	...	அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்
கோயமுத்தூர்	...	அமைச்சர் மு. கண்ணப்பன் மா. முத்துசாமி எம்.பி.
கரூர்	...	அன்பில் தர்மலிங்கம்
திண்டுக்கல்	...	மேயர் எஸ். முத்து
சாத்தூர்	...	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
கும்மிடிப்பூண்டி	...	இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
விருதுநகர்	...	எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
மேட்டூர்	...	செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
குடந்தை	...	சி. சிட்டிபாபு எம்.பி.
நாகப்பட்டினம்	...	க. அறிவழகன் எம்.எல்.சி.
சேலம்	...	வி. எஸ். கோவிந்தராசன் கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி.
புதுக்கோட்டை	...	ஆலடி அருணா எம்.எல்.ஏ.
மாயூரம்	...	அறிவுடைநம்பி எம்.எல்.சி. என். கிட்டப்பா எம்.எல்.ஏ.
பறங்கிப்பேட்டை	...	எம். செல்வராசு எம்.எல்.ஏ. திருப்பத்தூர் இராமமூர்த்தி
பொன்மலை	...	நன்னிலம் நடராசன் தம்பி தேவேந்திரன் எம்.எல்.ஏ.
பழனி	...	செல்வி தமிழரசி

கோவை மாட்டத்தைப் பொறுத்த வரையில் கோவை நகரம் தவிர மற்றப் பகுதிகளிலும், மதுரை நகரிலும் 3—7—72 அன்று கொள்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

மதுரை நகரம்	...	நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி. மேயர் எஸ். முத்து எம்.எல்.சி.
உடுமலைப்பேட்டை	...	வி. எஸ். கோவிந்தராசன்
பொள்ளாச்சி	...	கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி.

அமைச்சர் பெருமக்கள் மற்றும் குறிப்பிட்டுள்ள சொற்பொழிவாளர்களுடன், அந்தந்தப் பகுதியைச் சார்ந்த நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்களும், நகராட்சி மன்ற -- ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், தோழமைக் கட்சிகளின் தோழர்களும் கூட்டங்களில் கலந்துகொள்வர்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

'சனநாயகம் தழைத்தோங்கும் இந்நாளில் பழைய கொள்கைகள் ஏற்புடைத்தன்று'

[★]

'மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பெரும்பணி ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதாக இருப்பது அவசியம்'

[★]

'மனநிறைவுடன் மக்கள் வாழ வேண்டுமென்பதே அரசின் குறிக்கோள்'— இந்த இலட்சியம் நிறைவேறத் திறமையுடன் செயலாற்ற முனைவீர்'

[★]

கடமையை நினைவுறுத்திக் கலெக்டர்கள் மாநாட்டில் கலைஞர் விளக்கமும் வேண்டுகோளும்

சென்னை, ஜூன் 30—

"பண்டை நாட்களில் அரசின் கடமைகள், வரி வசூலிப்பது—சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற அளவோடு இருந்தது; ஆனால், சனநாயகம் தழைத்தோங்குகின்ற இந்த நாளில், அந்தப் பழைய கொள்கை ஏற்புடைத்தாக இல்லை; மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பெரும் பணி, ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் செயல்களில் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

"'பழையன கழிதலும்—புதியன புகுதலும், வழுவல உலக வழக்கே' என்பது, தமிழ் இலக்கணம் பற்றிக் கூறப்பட்டதெனினும், அது ஆட்சி முறைக்கும் பொருந்தும்; சுமார் இருபத்தைந்து—முப்பது ஆண்டுகட்குமுன், 'கலெக்டர்' என்றாலோ, மாவட்டப் போலீசு அதிகாரி' என்றாலோ, 'மக்களிடம் அதிகாரம் செலுத்த வந்தவர்கள்' என்ற ஓர் எண்ணம்தான் நிலவியிருந்தது; ஆனால், காலத்தின் போக்கால் அவர்கள் பெயர்—'மாவட்ட ஆட்சியாளர்கள்', 'மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்' என்று மாற்றம் ஏற்பட்டது மட்டுமல்லாமல் அவர்கள் பணிகளை ஆற்றும் முறையிலும்கூட மாற்றம் ஏற்பட்டுள்ளது; 'அதிகாரம் செலுத்த வந்தவர்கள்' என்ற நிலை மாறி, 'தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்' என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

"நீங்கள், ஏழை எளியவர்கள் வாழும் கிராமங்களுக்கெல்லாம் நேரடியாகச் சென்று—அவர்கள் குறைகளைக் கேட்டு அறிகின்றீர்கள்; மனு நீதித் திட்டத்தின்மூலம் இயலுமானால் அந்தந்த இடத்திலேயே முடிவினையும் அறிவிக்கின்றீர்கள்.

"இம்மாதிரி மக்களுடன் தொடர்பு கொண்டு—அவர்களின் சிறு சிறு குறைகளையெல்லாம் கேட்டறிந்து—பரிகாரம் காணும் பாங்கிலேதான் நிர்வாகத் திறமையே அடங்கியுள்ளது.

"ஏழை எளிய மக்கள் மனநிறைவோடு வாழவேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கம்; அதை நிறைவேற்றுவதில் உங்கள் பொறுப்பு—பொறுப்பு என்பதைவிட உங்கள் தொண்டு—தலையாய இடம் பெறுகிறது"

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாவட்டக் கலெக்டர்கள்—மாவட்டப் போலீசு அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்; நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்வுக்கான பணிகளைச் சுட்டிக்காட்டியும், மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்குகொண்டு—அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற அச்சாணி போன்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கடமைகளை நினைவுறுத்தியும் அவர் ஆற்றிய உரை வருமாறு:—

வந்தவர்கட்கு வாரி வழங்கிய மண்ணில் பிச்சை எடுத்தலை இனியும் அனுமதிப்பதா?

நமது மாநிலத்தில் பிச்சைக்காரர்களை—குறிப்பாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை முழுமையாக மேம்பாடடையச் செய்யவேண்டும் என்பதற்காகத் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறோம்; பிச்சைக்காரர்களுக்குத் தனி நிறுவனங்கள் ஏற்படுத்தி—அதில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு முதலியன ஏற்படுத்தித் தருவதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள்—காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை.

பிச்சை எடுத்தலையே தமிழகத்திலிருந்து விரட்ட வேண்டும்; வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய இந்த மண்ணில், பிச்சை எடுத்தலை இனியும் அனுமதிப்பது நல்லதல்ல; பிச்சை எடுத்தலை இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குள்ளேனும் ஒழித்தாகவேண்டும்.

கண்ணொளி வழங்கும் திட்டத்தில் தனி ஆர்வமும் அக்கறையும் காட்டுவீர்!

இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ள கண்ணொளி வழங்கும் திட்டத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்வீர்கள்; அரசு இயந்திரத்தின் அச்சாணி போன்ற நீங்கள், இந்தத் திட்டங்களில் தனி ஆர்வமும் அக்கறையும் காட்டுதல் அவசியம்.

விவசாயிகள் தொல்லைகள் நீங்க புதிய முறைக்கு வழிகோலுவோம்

கிராமத்திலே உள்ள விவசாயிகள் அனைவருக்கும் அரசிடமிருந்து கடன் வழங்குதல் போன்ற பல வழிகளில் உதவிகள் கிடைக்கின்றன; அவர்கள், தண்ணீர்த் தீர்வை—விவசாய வருமான வரி—கடன் பாக்கி போன்றவற்றிற்கு அரசுக்குப் பணம் செலுத்த வேண்டியிருக்கிறது; ஆனால், அவர்கள் எவ்வளவு கடன் வாங்கினார்கள்—வட்டி எவ்வளவு—எப்போது செலுத்தவேண்டும்—யாரிடம் செலுத்த வேண்டும் என்பன போன்ற தகவல்கள் அந்த எளிய மக்களிடம் இருப்பதில்லை; அதனால் அவர்கள் சிற்சில சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு ஒரு 'கணக்குப் புத்தக (பாஸ் புக்) முறை'யைச் செயல்படுத்த இந்த அரசு எண்ணியிருக்கிறது.

இத்துடன், கிராமக் கணக்குகளையும் எளிமையாக்கினால் நடைமுறைச் சிக்கல்கள் பல நீங்கி—அதனால் சிறு விவசாயிகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள் குறையும்; இது பற்றிய உங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உச்சவரம்பு: நடைமுறைச் சிக்கல்கள் தீர நடவடிக்கை எடுப்பீர்!

"1966-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உச்சவரம்புச் சட்டம் விரிவான நீண்டகால எச்சரிக்கை விளம்பரத்துடன் கொண்டுவரப்பட்டதால், சட்டம் வருவதற்கு முன்பே அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான தந்திரங்களில் நிலக்கிழார்கள் ஈடுபட்டு, பினாமி முறையிலும்—விதிவிலக்குகளைப் பயன்படுத்திக் கொண்டும்—உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டும் நிமிர்ந்து நின்றார்கள்; சட்டமோ, நாணிக் கோணித் தலைதாழ்த்திக் கொண்டது" என்று நான் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், அண்ணாவின் ஆட்சிக் காலத்திலும்—அதற்குப் பின்பும் வந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்களைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள்; இச்சட்டங்களோ, 'நிலம் ஒரு சில பணக்காரர்களின் தனி உரிமையாக மாறுவது கூடாது; நிலம் உழுபவனுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும்' என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இந்தச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்களை நீங்கள் சந்தித்திருக்கலாம்; அவைகள் எவையெவை—அவற்றைத் தவிர்க்க எந்தவித முறைகளைத் திருத்த வேண்டும்—என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது பற்றியும் நீங்கள் விரிவாக ஆராய இருக்கிறீர்கள்.

புன்செய்த் தானிய உற்பத்திக்குத் தீவிரத் திட்டம் அவசியம்

விவசாயத் துறையிலே நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்—உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம்—உணவுத் துறையில் நாம் தன்னிறைவை அடைந்துள்ளோம்—என்பது எல்லோருக்கும் மனநிறைவு தரும் ஒன்றாகும்.

தீவிர சாகுபடித் திட்டங்கள்—உயர்ந்த ரக விதைகளைக் கண்டுபிடித்தல் போன்ற ஆராய்ச்சிகள் பெரும்பாலும் நெல்லைப் பொறுத்த வரையில்தான் செயல்பட்டு வந்துள்ளன; பருத்தி, நிலக்கடலை, கம்பு, சோளம் போன்ற புன்செய்த் தானியங்களில் நாம் ஓரளவு அக்கறை காட்டியிருக்கிறோம்; என்றாலும், நெல்லுக்குக் காட்டிய அளவுக்கு மற்றத் தானிய உற்பத்தியில் நமது கவனம் அதிகமாகச் செலுத்தப்படவில்லை.

வேளாண்மைத் துறையினர், புன்செய்த் தானிய உற்பத்தியிலும் இனி அதிக அக்கறை காட்டவேண்டும்; அதற்கான திட்டங்களைத் தீட்டி—அவற்றைத் தீவிரமாக செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியாளர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அதிக அளவில் உற்பத்தியாகும் தானியங்கள் அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுப்பதில் காவல் துறையினரும்—உணவுத் துறையைச் சேர்ந்தவர்களும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

குடிசைப் பகுதிகள் சீரமைப்பு—துரித நடவடிக்கை அவசியம்

மழைக் காலங்களில் மூழ்கிப் போகின்ற ஏழை மக்களின் குடிசைகளை எல்லாம் மாற்றி—மாடி வீடுகள் கட்டித்தரும் வகையில் தீவிரமான முயற்சிகளில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டுள்ளது.

சென்னையிலுள்ள குடிசைகளை எல்லாம் சீரமைப்பதற்குச் சுமார் ரூ 40 கோடிக்குமேல் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது; இதை ஏழாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்கவேண்டும் என்ற முனைப்போடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதை யாவரும் அறிவர்.

மாவட்டத் தலைநகரங்களிலேயும் குடிசைப் பகுதிகள் தோன்றியுள்ளன; அவைகளைச் சீரமைப்பதில் வீட்டு வசதி வாரியம் ஈடுபட்டுள்ளது; இந்த வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையும் நீங்கள் விவாதிக்க இருக்கிறீர்கள்."

"'சமதர்ம வளங்கெழு சமுதாயத்தினை ஏற்படுத்துவது இந்த அரசின் நோக்கம்; சமதர்மம் என்றால், வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல—சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும்; சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம், புண்ணை மறைத்துப் பொன் துகில் அணிந்து கொள்கிற கதையாக முடிந்துவிடும்' என்று இவ்வாண்டு மார்ச் திங்கள் முதல் நாளன்று சட்டப் பேரவையில் நான் அளித்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

இந்தச் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காக அரசு தீட்டும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட நிர்வாகிகள் அச்சாணி போன்றவர்கள்; அரசு நிர்வாகத்தில் அரசு ஊழியர்கள் அத்தனைப் பேருக்கும் பங்கு உண்டு என்றாலும், மாவட்ட அளவில் பணிபுரியும் நீங்கள் பெரும் பங்கினை ஏற்றுள்ளீர்கள்.

மக்களை நேரடியாகச் சந்தித்து—அவர்களுடைய அன்றாட வாழ்வில் பங்கு கொண்டு—அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பணியில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள்; சிறந்த மாநில ஆட்சிக்கு அடிப்படை—சிறந்த மாவட்ட நிர்வாகமே; மாவட்ட நிர்வாகத்தின் சாதனையைக் கொண்டுதான் அரசின் திறமையை மக்கள் எடை போடுகிறார்கள்; நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்வுக்கான பணிகள் உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று என்று கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை என்று கருதுகிறேன்.

1970-ம் ஆண்டின் இறுதியிலும், 1971-ம் ஆண்டின் முற்பகுதியிலும் நீங்கள் தேர்தல் சம்பந்தப்பட்ட வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தீர்கள்; இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட போரின் காரணமாகச் சென்ற ஆண்டின் இறுதியிலும்—இவ்வாண்டின் முற்பகுதியிலும் உங்கள் முழுக் கவனத்தையும், மக்கள் நலனை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியவில்லை என்பதை நான் உணருவேன்.

இன்று தேர்தலோ—போரோ இன்றி, நெருக்கடி நிலைமை நீங்கி அமைதிச் சூழ்நிலை நிலவுகின்ற இந்த நேரத்தில், உங்கள் முழுக் கவனத்தையும் மக்களின் ஆக்கப் பணிகளில் செலுத்த இயலும்.

ஒளிமிக்க எதிர்காலத்தை இந்நாட்டிற்கு உருவாக்கித் தர முனைவீர்!

பெருகிவரும் மக்கள் தொகையை ஓரளவில் கட்டுப்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறையுடன் பணியாற்ற வேண்டும். குடும்ப நலத் திட்டத்தை ஆர்வத்துடன் செயல்படுத்த வேண்டும்; சென்ற ஆண்டில் தென் ஆற்காடு—தஞ்சை—திருச்சி போன்ற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஆற்றிய பணி போற்றுவதற்குரியது.

பாமர மக்களிடத்திலும் படித்தவர்களிடத்திலும் அறுவைச் சிகிச்சை முறைபற்றியுள்ள ஒருவிதப் பயத்தை நாம் அறவே நீக்கிவிட்டதாகச் சொல்வதற்கில்லை; அங்கொன்றும் இங்கொன்றுமாக அறுவைச் சிகிச்சையில் ஏற்படுகின்ற சிறு கோளாறுகள், அந்தப் பயத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆகவே, குடும்ப நலத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர்கள், தாங்கள் மேற்கொள்ளும் அறுவைச் சிகிச்சைகளில் நூற்றுக்கு நூறு வெற்றிக் காண வேண்டும்; ஏழை—எளிய மக்களிடம், 'அறுவைச் சிகிச்சைக்குப்பின் மருத்துவமனைகளில் அக்கறையுடனும்—அன்புடனும் கவனிக்கிறார்கள்' என்ற எண்ணம் பரவவேண்டும்.

இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், 'ஒளிமிக்க எதிர்காலத்தை இந்நாட்டில் உருவாக்கிக் கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ளோம்' என்ற எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்தை இன்னும் திறம்படச் செயலாற்ற என்னென்ன வழிமுறைகளைக் கையாளவேண்டும் என்பதுபற்றி எல்லாம் நீங்கள் விவாதிக்க இருக்கிறீர்கள்; ஆகவே, அதைப்பற்றி நான் மேலும் அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

நம்பிக்கை ஒளி ஏற்றுவீர்!

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் சில சிறு திட்டங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் நிறைவேற்றுவதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன்; உதாரணமாக, கோடைகாலத்தில் கோடை வாசஸ்தலங்களுக்குச்சென்று தங்கள் விடுமுறையைக் கழிக்க இயலாத நூற்றுக்கணக்கான மாணவர்களும்—மாணவிகளும் இருக்கிறார்கள்; மதுரை மாவட்டத்தில், ஏழ்மை நிலையிலுள்ள சில மாணவ—மாணவிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொடைக்கானலுக்கு அனுப்பி ஓய்வுநாட்களைப் பயன்படும் முறையில் கழிக்கும் வண்ணம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினார்; இதில் எத்தனைபேர் பயனடைந்தார்கள் என்பதல்ல முக்கியம்; 'சமூகத்தின் அடித்தளத்திலே உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அரசு முற்பட்டுள்ளது' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

'கோடை வாசம் வாழ்க்கையில் வசதி படைத்தோர்களின் தனி உரிமை' என்ற கருத்தைப் போக்க இது பயன்படும்; 'தாழ்ந்து கிடக்கும் நாம் முன்னுக்கு வர இயலுமா' என்று ஏங்கித் தவிக்கும் இளம் உள்ளங்களில் ஏற்படும் நம்பிக்கை ஒளியாகும்; அந்த முறையில் இத்திட்டம் போற்றத்தக்க ஒன்றாகும்.

மேலும், மற்ற மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியாளர்களின் முயற்சியால் கல்லூரிகளும்—பள்ளிகளும்—திருமண மண்டபங்களும்—விளையாட்டு அரங்கங்களும் தோன்றுகின்றன; இவைகள் எல்லாம் வரவேற்கத்தக்கனவாகும்.

நிலைமைகளை நேருக்குநேர் சந்திக்கையில்..

சென்னை, ஜூன் 30—

"சட்டம்—அமைதியைப் பேணிப் பாதுகாப்பதில் தமிழகம் என்றும் தலைசிறந்து விளங்குகிறது; தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் எனினும்—மாணவர்கள் போராட்டமானாலும்—விவசாயிகள் கிளர்ச்சி என்றாலும், காவல் துறையினரும்—மாவட்ட ஆட்சியாளர்களும்—ஏனைய வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

"இதுபோன்ற கிளர்ச்சிகளின் போது, எப்படியாவது வன்முறைச் செயல்கள் தலைதூக்கி விடுகின்றன; கோரிக்கைகளின் முக்கியத்துவம்—நியாயம் ஆகியவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றன; இத்தகு சூழ்நிலைகளில், நிலைமைகளை நேருக்குநேர் சந்திக்கும் மாவட்ட அதிகாரிகள் மிகவும் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது; அந்த நிதானத்தைத் தொடர்ந்து கடைபிடித்துச் செம்மையாகப் பணியாற்றுங்கள்."

—முதலமைச்சர் கலைஞர்
(கலெக்டர்கள் மாநாட்டில்)

வேலை வாய்ப்பின்றி வேதனையுறுவது நாட்டிற்கு நன்மை தருவதல்ல!

தேசிய அளவில் திட்டங்கள் தீட்டப்படவேண்டும்

மாவட்ட அளவில் தயாரிக்கப்படும் திட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்

சென்னை, ஜூன் 30—

"இன்று வறுமையும்—வேலையின்மையும் அரசின் முன் நிற்கும் பெரும் பிரச்சினைகள் ஆகும்; படித்த இளைஞர்கள் பலர் நகரில் மட்டுமன்றிக் கிராமப்புறங்களிலும் வேலையின்றித் தவிக்கின்றனர் என்பது உண்மை.

ஒரு நாட்டின் எதிர்காலம் ஒளியுடன் விளங்க வேண்டுமானால், அந்நாட்டில் உடல் வலிவும்—மன வளமும் கொண்ட இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றித் தவிக்கும் நிலை மாறவேண்டும்; அவர்களிடம் வாழ்க்கையில் ஏமாற்றமோ மனச் சோர்வோ ஏற்படக்கூடாது; அது நாட்டுக்கு நல்லதல்ல!

வேலையின்மையைப் போக்குவதற்குத் தேசிய அளவிலே திட்டங்கள் தீட்டப்படவேண்டும்; எனினும் இந்த அரசு, இளைஞர் அணியை அமைத்தல்—பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்—பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் நுட்பக் கல்விகளில் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கித் தருதல் போன்ற பல காரியங்களைத் தன்னால் இயன்ற அளவுக்குச் செய்துவருகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சில குடிசைத் தொழில்கள் சிறந்து விளங்க வாய்ப்புகள் இருக்கின்றன; நீர் வளம்—மின்சக்தி—மூலப் பொருள்கள்—எளிதில் தொழிலாளர்கள் கிடைக்கும் நிலை—இவைகளைப் பொறுத்து ஆங்காங்கு சிறிய அளவில் நவீன தொழிற்சாலைகளை ஏற்படுத்த மாவட்டங்களில் வாய்ப்புகள் இருக்கின்றன.

தொழில் முன்னேற்றம் விவசாய வளர்ச்சி ஆகியவைகள் சீரான முறையில் நடைபெற வேண்டுமென்பதற்காகவே நமது மாநிலத்தில் திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு—அது செவ்வனே செயல்பட்டுவருகிறது; ஆனால் நம் நாட்டில் திட்டம் என்பது, கிராமங்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும்.

ஆகவேதான், 'மாவட்ட அளவில் முதலில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு—அது மாநில அளவில் உருவாக்கப்படவேண்டும்' என்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது; மாவட்ட அளவில் தயாரிக்கப்படும் திட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பெரும் பங்கு உண்டு; அதில் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

—முதலமைச்சர் கலைஞர்
(கலெக்டர்கள் மாநாட்டில்)



'தரையடி நீர்வளம் மிகுதியாக இல்லை'

தமிழகத்தில் நடத்திய சோதனைபற்றி செ. கந்தப்பன் தகவல்

கிராமக் குடிநீர் வழங்கும் திட்டம் குறித்து காஞ்சிக் கருத்தரங்கில் விளக்கம்

காஞ்சிபுரம், ஜூன் 30—

"தமிழ்நாட்டில் தரைக்கரையில் நீர்வளம் நிரம்ப இருக்கிறது என்று கூறப்படுவது சரியல்ல; விஞ்ஞான அடிப்படையில் சோதனைகள் நடத்திப் பார்த்ததில், தரையடி நீர்வளம் அதிகமாக இல்லை என்பது தெரியவந்திருக்கிறது; பாலாற்றில்கூட, 100 லிருந்து 150 அடி ஆழத்தில் பார்த்தபோது பாறை மணல்தான் காணப்பட்டது; 'இது நீர் ஊற்று இல்லாத மணல்' என்று நிபுணர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்"

என்று குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் பிரச்சினை பற்றிக் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; 'தற்போது இந்த மாவட்டத்தில் 5,010 கிராமங்களில் 860 கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி இல்லை' என்றும் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"தண்ணீர் ஊற்று உள்ளது என்று சோதனை மூலம் கண்டறிந்த இடங்களில் கிணறுகளை தோண்டுவதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

பழைய கிணறுகளை ஆண்டுதோறும் ஆழப்படுத்திக் கொண்டே போவதில் பயனில்லை.

1937-ல் இராஜாஜி அமைச்சராக இருந்தபோது, 'கிராமங்களுக்குச் சாலைகள்—கல்வி அறிவு ஆகியவற்றைக் காட்டிலும் குடிநீர் வசதியே மிக முக்கியம்' என்று வலியுறுத்தினார்; அதற்காகச் சிறப்பு நிதி ஒன்றையும் அவர் தோற்றுவித்தார்; எனினும், இப்பிரச்சினை இன்னமும் நீடிக்கிறது.

குடிநீர்—வடிகால் வாரியத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 115 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன; இவற்றுக்காக ரூ. 45 கோடி செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 58,595 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 406 இலட்சம் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன."

எம். துரைராசன்

நீர்வள—கழிவு நீர் வாரியத் தலைமைப் பொறியர் எம். துரைராஜ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டிலுள்ள 58,000 கிராமங்களில் தண்ணீர் வசதி இல்லை.

கிராமங்களனைத்துக்கும் தண்ணீர் சப்ளைக்கு வகை செய்யவேண்டுமானால் ரூ. 404 இலட்சம் தேவை என்று மதிப்பிடப்படுகிறது."

மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி யு. சுப்பிரமணியம் அமைச்சரையும்—மற்றவர்களையும் வரவேற்[illegible]

குடிநீர்—வடிகால் வாரிய இயக்குநர் மு. ரகுபதி, சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி, பி. வி. [illegible]ராசகோபால், மற்றும் பலரும் பேசினர்.

ஏழைஎளிய மக்களுக்கு... வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படச் செய்வீர்!

சென்னை, ஜூன் 30—

"தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான ஏழை—எளிய மக்களுக்கு வீட்டு நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது; இது ஏழை-எளிய மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையும்—பிடிப்பும் ஏற்படுவதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டம் ஆகும்; இதை விரைவாகவும் செம்மையாகவும் செயல்படுத்துவதில்தான் மாவட்ட ஆட்சியாளர்களாகிய உங்களின் திறமை அடங்கியிருக்கிறது.

"கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களின் பெரும் பகுதியினை நீங்கள் ஏழை—எளிய மக்களுக்கும் பட்டா செய்து கொடுத்திருக்கிறீர்கள்; சுமார் 26 ஆண்டுக் காலத்தில் செய்யப்படாத ஒன்றை நீங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள்; 'நிலமற்ற ஏழை மக்கள், அரசு நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள்' என்ற எண்ணத்தை மாற்றி, 'இது எனது—என்னுடையது' என்ற நம்பிக்கையை அந்த ஏழை எளியவர்கள் மனதில் ஏற்றியுள்ளீர்கள்!

"இன்னும் மீதமுள்ள தரிசு நிலங்களையும் விரைவிலேயே அடமானம் செய்துகொடுத்து, 'அடமானம் செய்வதற்கு இனி தரிசு நிலங்களே இல்லை' எனும் நிலையினை இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் உண்டாக்க வேண்டும்."

—முதலமைச்சர் கலைஞர்
(கலெக்டர்கள் மாநாட்டில்

நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு ரூ. 2 இலட்சம்

பீகாரில் நிர்ணயம்

பாட்னா, ஜூன் 30—

5 பேர்கள் அடங்கிய குடும்பத்துக்கு நகர்ப்புறச் சொத்து உச்சவரம்பு ரூ. 2 இலட்சம் என்று நிர்ணயிக்கும் மசோதா பீகார் சட்டமன்றத்தில் நிறைவேறியது.

மொத்தம் 95 அதிகாரச் சார்பற்ற திருத்தங்களும்—4 அரசுத் திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன; அரசுத் திருத்தங்கள் மட்டுமே ஏற்கப்பட்டன.

இந்த மசோதா ஏற்கனவே மேலவையில் நிறைவேறியுள்ளது.

நிலத்திற்கு உச்சவரம்பு

பீகார் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நிலச் சீர்திருத்த மசோதா இரண்டு நாள் விவாதத்துக்குப் பின் நிறைவேறியது.

இந்தச் சட்டம், நிலச் சீர்திருத்தப் பிரிவுகளை 1970-ம் ஆண்டு செப்டம்பர் 9ந் தேதியிலிருந்து செயல்படுத்த வகை செய்கிறது.

"ஒரு குடும்பம், 15 ஏக்கர்முதல் 45 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கலாம்" என்று இந்தச் சட்டம் வகைப்படுத்தி உச்சவரம்பு விதிக்கிறது.

பெங்களூர், ஜூன் 30—

கடந்த பிப்ரவரியில் மைசூர் சட்டமன்றத்துக்கு நடந்த தேர்தலையொட்டித் தலைமையமைச்சர் இந்திரா காந்தி மைசூர் மாநிலத்துக்குச் சென்றிருந்தபோது அரசுக்கு சுமார் ரூ. 3.37 இலட்சம் செலவாயிற்று.

இத்தகவலை முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"பாதுகாப்புக்காகவும்—வேலிகளை அமைப்பதற்காகவும் சுமார் ரூ. 67,000 செலவிடப்பட்டது" என்றும் அவர் சொன்னார்.

உணவுத் தானியக் கடத்தலை தடுக்கத் தீவிர முயற்சி

கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்குக் கடுந் தண்டனை விதிக்கப் புதிய சட்டம்

கண்காட்சியின் பெயரால் ஆபாச நடனம் --- சூதாட்டம் நடத்துவோர்மீது கடும் நடவடிக்கை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு முடிவு --- முதலமைச்சர் கலைஞர் தகவல்

சென்னை, ஜூலை 1—

"நேற்று சென்னையில் துவங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் -- காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் உணவுத் தானியக் கடத்தலைத் தடுப்பதில் தீவிர நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்கப்பட்டது; அப்படிப்பட்ட கடத்தல்களில் கைப்பற்றப்பட்ட உணவுத் தானியங்களை இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 6-ஏ பிரிவுப்படி பறிமுதல் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

"கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற குற்றங்களைச் செய்பவர்கட்கு இப்போதிருக்கின்ற தண்டனை போதாது என்கின்ற வகையில், அதிக அளவு சிறைத் தண்டனை அளிக்கச் சட்டம் கொண்டு வருவது பற்றியும் -- அதற்கான விவரங்களும் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது"

என்ற தகவலை, முதல் நாள் மாநாடு முடிந்ததும், முதலமைச்சர் கலைஞர், செய்தியாளரிடம் தெரிவித்தார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை இந்த ஆண்டு தீவிரப்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது; இந்த ஆண்டு மாநிலம் முழுவதிலும் ஏற்கனவே உள்ள மூன்று பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதிகளையும் சேர்த்து மொத்தம் பத்து மறு வாழ்வு விடுதிகளை அமைப்பதென்றும், அவற்றுக்கான இடங்கள் போன்றவற்றை உடனடியாகத் தேர்ந்தெடுத்து விவரங்களை அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைவாக முயற்சிகளில் ஈடுபடுவதென்றும் முடிவாயிற்று.

வறட்சிப் பகுதிகளை மேம்பாடு செய்யும் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தை மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது; இம்மாவட்டத்தின் பின்தங்கிய நிலையைப் போக்கும் திட்டத்துக்கு ரூ. 3 கோடி அல்லது ரூ 4 கோடி செலவிடப்படும்.

சுவரொட்டிகள் ஒட்டப்படுவதால் பொது இடங்களுக்கும் -- தனியார் இடங்களுக்கும் ஏற்படுகின்ற கேடுகள் பற்றியும், போக்குவரத்துக்கு ஏற்படுகின்ற சங்கடங்கள் பற்றியும் விவாதித்து, சுவரொட்டிகளையும் -- விளம்பரப் பலகைகளையும் வைப்பது பற்றிச் சில கட்டுப்பாடுகள் கொண்டுவந்து விதிமுறைகள் வகுப்பது பற்றி முடிவு செய்யப்பட்டது.

'கண்காட்சிகள்' என்ற பெயரில் ஆபாச நடனங்கள் -- சூதாட்டங்கள் ஆகியவற்றை நடத்தி, அதன் மூலமாகக் கண்காட்சிகள் நடத்துதலையே ஒரு தொழிலாக ஆக்கிக்கொள்ளும் நிலைமையை மாற்ற இப்போது காவல் துறையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படவும், அப்படிப்பட்ட கண்காட்சிகளை நடத்துவோர் மீது காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது"

கேள்வி:—"விவசாயிகள் போராட்டம் பற்றி மாநாட்டில் பேசப்பட்டதா?"

பதில்:—"விவசாயிகள் கிளர்ச்சி நிலைமை பற்றியும் ஆராயப்பட்டன."

கேள்வி:—"உத்தேச 'பந்த்' பற்றி என்ன முடிவு செய்யப்பட்டது?"

பதில்:—"வழக்கம்போல், சட்டம்--ஒழுங்கு--பொது அமைதி காக்கக் காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுப்பர்."

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

ஜூலை 2 காலை 9-மணி: ஆற்காடு நகரமன்ற வரவேற்பும் -- குடும்பக் கட்டுப்பாடு நிலையத் திறப்பு விழாவும்; 10 மணி: சீரணியால் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; இரவு 7-மணி: ஆற்காடு பொதுமக்கள் வரவேற்பு.

ஜூலை 3 மாலை 3-மணி: மண்ணச்சநல்லூர் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற நிகழ்ச்சி; 4-மணி: மண்ணச்சநல்லூர் சிந்தனையாளர் கழக நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுதல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

3--7--72

சத்திரப்பட்டி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு நடுத்தெருவில்; தலைவர்: மு. குருசாமி; பேசுவோர்: திருவை அண்ணாமலை, ஆர். கே. துரை, டி. கே. கே. சாமி, எம். ஐயனுர், கு. குத்தாலலிங்கம். (முத்தமிழ் இசைக் குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

முத்துப்பேட்டை

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு இரயில்வே திடலில்; தலைவர்: கி. இராமாநுசம்; பேசுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., ந. தர்மலிங்கம், இரா. இராசன், மா. மீனாட்சிசுந்தரம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனு நீதித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயலாக்கி வருவது மக்களது மனோபாவத்தில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி -- அவர்களை ஆட்சி நிர்வாகத்துக்குப் பக்கத்தில் அழைத்துவந்து சேர்த்துள்ளது என்பதை இங்கே மீண்டும் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும். தமிழகம் இந்த வகையில் காட்டியுள்ள முன்னுதாரணத்தைப் பிற மாநிலத்தவரும் பின்பற்றுவார்கள் என நம்புகிறேன்."

உச்சக் கட்டப் பேச்சு நீடிப்பு

முட்டுக்கட்டையை நீக்க தொடர்ந்து முயற்சி

சிம்லா, ஜூலை 1—

இந்தியா — பாகிஸ்தான் உச்சகட்டப் பேச்சு வார்த்தை, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட 4 நாட்களுக்குமேல் ஒரு நாள் நீடிக்கப்படுகிறது.

ஏற்கனவே உள்ள திட்டப்படி, இன்றுடன் உச்சக் கட்டப் பேச்சு முடிவதாக இருந்தது; இப்போது இந்தியா—பாகிஸ்தான ஆகிய இரு வட்டாரங்களுமே, 'பேச்சு மேலும் ஒருநாள் நீடிக்கப்படலாம்' என்று கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

நேற்றிரவு 7-மணியளவில் ஆளுநர் மாளிகையில் இந்திராவும்—பூட்டோவும், தூதுக் குழுவினர் இல்லாமலே தனியாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்! அதிகார மட்டத்தில் காணப்பட்ட கருத்து வேற்றுமைகளைப் பற்றி அவர்கள் விவாதித்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

பேச்சுவார்த்தை தொடங்கியதிலிருந்து இந்திராவும்—பூட்டோவும் சந்திப்பது இது மூன்றாவது தடவையாகும்; ஆனால் இதுதான முதலாவது உச்சக கட்டப் பேச்சுவார்த்தையாகும்.

ஆளுநர் மாளிகைக்குச் செல்லுகையில் இருவரும் தெம்புடன் இருந்தனர் என்றும், வெளியே வருகையில் முகத்தில் கடுகடுப்பு இருந்தது என்றும் செய்திகள் கூறுகின்றன.

வெளிநாடுகளிலிருந்து ஆர்டர்

சென்னை, ஜூன் 30—

மொத்தம் ரூ. 55 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை அனுப்புமாறு பலவேறு ஐரோப்பிய நாடுகள் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்துக்கு ஆர்டர் கொடுத்திருக்கின்றன.

இந்த ஏற்றுமதி ஆர்டர்கள் தவிர, இந்தியாவிடமிருந்து கைத்தறித் துணிகளை வாங்குவதுபற்றிப் பல ஐரோப்பிய நாடுகள் ஆர்வம் காட்டியிருக்கின்றன.

பூ. கணேசன் இல்லத் திருமணம்

தமிழகக் குடும்ப நலத்துறைத் துணை இயக்குநர் திரு. பூ கணேசன் அவர்களின் மகன் செல்வன்: **வெற்றிமணிக்கும்** -- செல்வி: **அனுசூயாவுக்கும்**, 3—7—72 காலை 9-30 மணியளவில் திருத்துறைப் பூண்டியடுத்து மடப்புரத்தில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. **அன்பழகன்** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; வேளாண்மை அமைச்சர் **மன்னை நாராயணசாமி** அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

30-6-1972 அன்று அரசினர் அரும்பொருட் காட்சி அரங்கில் நடைபெற்ற 45-வது குலுக்கல் முடிவுகள் – பரிசுகள் பெற்ற எண்களின் விவரம் :--

'ஜே. ஐ.' வரிசை

ஒரு முதல் பரிசு : ரூ. 1,00,000

017552

5 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்

015161	022116	140514	140676
804082			

10 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

009057	213602	390623	424295
431687	629962	761610	770094
971779	998215		

50 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

032372	042154	057405	076320
095311	095876	125612	129289
133784	138201	179683	224899
247237	273582	282498	306097
345968	428514	435027	449375
451834	451863	465950	480267
482720	502763	517854	522927
548874	588875	653895	659295
660431	664761	678212	749376
750472	768238	777044	778057
839031	857402	872476	881804
919918	920571	937946	962414
984550	992690		

1,000 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்;—

0177	0286	1708	4380	5709
6054	6917	8593	8663	8714

'ஜே. ஜே.' வரிசை

ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000

786191

5 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ.10,000 விதம்

066439	249818	300241	783395
841602			

10 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ 5,000 விதம்

009558	159387	337998	746698
751466	854618	861210	880369
890119	982301		

50 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

004031	089311	091713	111638
111699	134254	210885	222299
235515	240012	247381	252510
320759	426695	431960	442972
456328	466104	479319	501378
532299	538610	556664	567093
627403	650889	680511	699416
701860	721475	727108	752728
761719	776533	778715	781783
792443	798980	864773	868961
881220	886751	918125	924454
927793	940349	943739	947019
951493	954152		

1,000 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில் துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—

1388	2599	3651	4816	5296
5297	6140	7321	8443	9017

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 3-வது பரிசுமுதல் 5-வது பரிசுவரை பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள் பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசு பெற்ற எண்கள் அடங்கிய விவரப் பட்டியல் தமிழக அரசிதழ்களிலும் அச்சிடப்படுகின்றன; மேற்படி பட்டியல் வேண்டுவோர், 'உதவிப் பணி மேலாளர், அரசு வெளியீட்டு நிலையம், 166, அண்ணா சாலை, சென்னை-2' என்ற முகவரிக்கு எழுதி அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுச் சீட்டு பற்றி விவரங்கள் எதுவும் தேவைப்பட்டால், 'இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கடைசித் தேதி: **27—7—1972**

46-வது குலுக்கல்

46-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1972 ஜூலை மாதம் 31-ந் தேதி நடைபெறும்.

மொத்தப் பரிசுகள் : 2,132

மொத்தப் பரிசுத் தொகை : ரூ. 7,00,000

அடுத்த குலுக்கல் : 31-7-1972 -- அடுத்த குலுக்கலுக்கு வரிசைகள் : 2 (இரண்டு) -- 'ஜே. கே.' -- 'ஜே. எல்.'

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

இதுவரை 289 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது! உங்கள் பணம் உங்களுக்கும்—நாட்டிற்கும் உதவுகிறது! உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்கலாமே!

ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்

தே. அரங்கநாதன், இயக்குநர்,
தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

வேளாண்மைத் துறை அமைச்சர்

மன்னை நாராயணசாமி நிகழ்ச்சிகள்

ஜூலை 2 காலை 9 மணி: கும்பகோணம—பூனையிருப்புப் பள்ளிக் கட்டடக் கால்கோல் விழா; 11 மணி: நெடுந்தெரு பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 4 மணி: கொற்கைப்பட்டு — மின்விளக்கு ஏற்று விழா; 6 மணி: அவளிவநல்லூர்—மின்விளக்கு ஏற்று விழாவும், குடிநீர்த் தொட்டி அடிக்கல் நாட்டுவிழாவும்; இரவு 7 மணி: அம்மாப்பேட்டை பேரூராட்சி மன்ற வரவேற்பு; இரவு 8 மணி: தஞ்சாவூர்—பொதுக்கூட்டம்.

ஜூலை 3 காலை 9-30 மணி: மடப்புரம் (திருத்துறைப்பூண்டி)—திருமணம்; மாலை 3 மணி: திருமருகல் ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் விவசாயக் கிடங்குத் திறப்பு விழாவும்; 4 மணி: நன்னிலம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு: திருப்பாலக்குடி—பொதுக்கூட்டம்.

அமெரிக்காவில் மரண ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்புக் கூறினர்.

நான்கு நீதிபதிகள் இதனை ஒப்புக்கொள்ளவில்லை; இந்த நான்கு நீதிபதிகளும் அதிபர் நிக்சனால் நியமிக்கப்பட்டார்களாவர்.

அமெரிக்கச் சிறைகளில் தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டு 585 பேர் இருந்துவருகின்றனர்; இந்தத் தீர்ப்பின் விளைவாக அவர்கள் உயிர் தப்ப இயலும்.

அரசியல் சட்டத்தைத் திருத்தினாலன்றி இனி தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்ற இயலாது.